அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 11

## புலன்மொழி வளத்தேர்வு வாசித்தல்

பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்து யாழ்ப்பாண அரசு வலிமை மிகுந்திருந்த காலங்களில் அதன் ஆளுமையை ஏற்று வன்னிச் சிற்றரசுகள் தனியாக இயங்கி வந்தன. யாழ்ப்பாண அரசு வலிமை குன்றியிருந்த காலங்களில் வன்னியரசுகள் தனித்தன்மையுடைய அரசுகளாகத் திகழ்ந்தன. யாழ்ப்பாண அரசு போர்த்துக்கேயரிடம் வீழ்ச்சியடைந்த பின், பதினேழாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வன்னியின் பனங்காமம் பகுதியில் வலிமை மிகுந்த அரசாக கயிலைவன்னியனின் அரசு விளங்கியது. யாழ்ப்பாணத்தமிழரசு வீழ்ச்சியடைந்த பின்னர் வன்னியில் நிலவிய கயிலைவன்னியனது ஆட்சியும் பண்டாரவன்னியனது ஆட்சியுமே தமிழருக்குப் பெருமை தரக்கூடிய ஆட்சிகளாகத் திகழ்ந்தன.

இவர்களது ஆட்சியானது மாற்றாரை வியக்கவும் திகைக்கவும் வைத்த ஆட்சியாக அமைந்ததெனக் கூறலாம். சிதம்பரநாச்சி, நல்லநாச்சி போன்ற பெண்களும் ஒல்லாந்தருக்கு எதிராகப் படை திரட்டிப் போரிட்டனர் என அறியமுடிகிறது. வன்னியரசர்களும் வன்னி மக்களும் தளராத உறுதியும் மாற்றானுக்கு அடிபணியாத தன்மையும் கொண்டவர்களாயிருந்தனர். இவர்களின் வீரம் செறிந்த போர் வலிமையினாலும் உணர்வினாலும் வன்னிமண் அடங்காப்பற்று என்ற சிறப்புப் பெயரையும் கொண்டிருக்கின்றது. தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்திலும் வன்னிமண் வீரம் செறிந்ததாகவே நிமிர்ந்து நின்றது.